## அத்தியாயம் 7

# குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழில்நிலை


## 7.1 பொதுநோக்கு

2001 நடுப்பகுதியில் தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட குடித்தொகை மற்றும் வீடமைப்பு-2001, 2001ஆம் ஆண்டின் இலங்கையின் குடித்தொகையியல் புள்ளிவிபரத்தில் ஒரு மிகப்பெரும் சாதனையாகும். தொகைமதிப்பு-2001, இறுதித்தொகை மதிப்பு நடத்தப்பட்ட 1981இன் பின்னர் 20 ஆண்டுகள் கழிந்த நிலையில் திட்டமிடுவோருக்கும், கொள்கை வகுப்போருக்கும் குடித்தொகையியல் காரணிகள் மீதான பல முக்கியமான தகவல்களைத் தருகின்றது. தொகைமதிப்பு-2001இன் மதிப்பீடுகளின்படி, மொத்தக் குடித்தொகை 18.7 மில்லியன் ஆட்களாகவும் குடித்தொகையின் சராசரி ஆண்டு வளர்ச்சி வீதம் 1981இலிருந்து 2001 வரையான 20 ஆண்டு காலப்பகுதியில் 1.2 சதவீதமாகவும் இருந்தது. பொதுவான வீதத்துடன் ஒப்பிடுகையில் குறிப்பிட்ட மாவட்டங்களில் உயர்ந்த குடித்தொகை வளர்ச்சிவீதம் காணப்படுவதற்கும் குடித்தொகையின் பிராந்திய பரம்பலில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் காணப்படுவதற்கும் இந்த 20 ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற பொருளாதார சமூக அபிவிருத்திகளே காரணமாகும். மேலும், வயது முதிர்ந்த குடித்தொகை அதேபோன்று பால் விகிதத்தில் மேலும் வீழ்ச்சி என்பனவற்றை தொகைமதிப்பு-2001 எடுத்துக்காட்டியது. தொகைமதிப்பு-2001 வெளிப்பாடு பிராந்தியங்களிடையே உயர்ந்த பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை கட்டுப்படுத்தக்கூடிய அபிவிருத்திக் கொள்கைகளின் தேவையை வலியுறுத்தியது. மேலும், வயது முதிர்ந்தோரின் சமூக பாதுகாப்புடன் தொடர்பான பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் போதுமான சீர்திருத்தங்களை விரைந்து மேற்கொண்டாலொழிய அரசின் மீதான சுமை அதிகரிக்க வழிவகுக்கும்.

2001இல், இலங்கையில் தொழிலாளர் சந்தை வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு அதிர்வுகளின் காரணமாகக் தோன்றிய எதிர்க்கணிய வளர்ச்சி, பெரும்பாலும் அனைத்துத் துறைகளிலும் தொழிலாளர்களுக்கான கேள்வி சுருக்கமடைந்தமை என்பனவற்றின் விளைவாக பாதிக்கப்பட்டது. தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட காலாண்டு தொழில்படை அளவீட்டின் 2001ஆம் ஆண்டிற்கான இரண்டாம் மற்றும் நான்காம் காலாண்டிற்கான தரவுகள் இல்லாமையால் 2001ஆம் ஆண்டின் முதலாம் மற்றும் மூன்றாம் காலாண்டுகளின் அடிப்படையின்படி 1990ஆம் ஆண்டிலிருந்து வீழ்ச்சியடைந்த போக்கினைக் காட்டிய தொழில்வாய்ப்பின்மை 2000ஆம் ஆண்டின் 7.6 சதவீதத்திலிருந்து 2001இல் 7.8 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது. இவ் ஒப்பீடு பருவகாலத் தன்மைகளைக் கருத்திற் கொள்ளவில்லை. இவ் வெளியீடு பொதுவான தொழில்நிலை உருவாக்கத்தில் சுருக்கத்தைக் கொண்டிருந்தவிடத்து தனியார்துறை தொழில்வாய்ப்பினை வழங்கும் முக்கிய உதவுநராகத் திகழ்ந்தமையை சுட்டிக்காட்டியது. பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட பின்னடைவு நாட்டில் ஏற்கனவேயுள்ள மிகுந்த கடுமையான தொழிலாளர் சட்டங்களின் காரணமாக முதலீட்டின் மீது மோசமான காலங்கடந்த தாக்கத்தினை கொண்டிருக்கக்கூடும். 2001ஆம் ஆண்டுப் பகுதியில் தொழில்முயற்சிகளில் சுருக்கம் காணப்பட்டபோதும் 1971ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க வேலையாட்களின் தொழில்நிலை முடிவுறுத்தல் சட்டம் தொழில்முயற்சிகள் தமது தொழிற்படையைக் குறைப்பதன் மூலம் அவற்றை மறுசீரமைப்பதனை தடைசெய்கின்றது. எனவே தொழில்முயற்சிகள் மிகையான தொழிலாளர்களைப் பேணுவதனால் ஏற்படும் முழுச்செலவினையும் தாங்கிக்கொள்ள வேண்டியிருந்தமையின் காரணமாக அவர்களின் உற்பத்தியாக்கம் குறைவடைந்ததுடன் தொழிலாளர் செறிந்த கைத்தொழில்களில் எதிர்கால முதலீடுகளையும் ஊக்கம் குன்றச்செய்தது. தற்பொழுதுள்ள தொழிலாளர் சட்டங்களை பொருளாதாரத்தில் உயர்ந்த வளர்ச்சி செயலாற்றத்திற்கு உதவுகின்ற விதத்தில் மீளாய்வு செய்யவேண்டுமென நீண்டகாலமாக உணரப்பட்ட தேவை 2001ஆம் ஆண்டில் நாட்டின் பொருளாதார செயலாற்றத்தின் காரணமாக மேலும் வலியுறுத்தப்பட்டது.

ஆண் மற்றும் பெண் ஆகிய இருவரினதும் தொழிற்படை பங்கேற்பு வீதத்தினால் அளவிடப் பட்டவாறு பெரும்பாலும் அனைத்து வயதுத் தொகுதியினரிடையேயும் காணப்படும் தொழிலின்மை வீதங்களில் ஏற்பட்ட வீழ்ச்சி, வீழ்ச்சியடைந்து செல்கின்ற

தொழிற்படையின் போக்குகளும் தொழிலின்மையும்
1992 - 2001



**சிறப்புக் குறிப்பு - 9**

## குடித்தொகை மற்றும் வீடமைப்பு தொகை மதிப்பு-2001

### 1. அறிமுகம்

2001 யூலை 17ஆம் நாளன்று குடித்தொகை மற்றும் வீடமைப்பு தொகைமதிப்பு-2001இன் நான்காவதும் இறுதியுமான கட்டம் பூர்த்தி செய்யப்பட்டதுடன் தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம் 1981 இற்குப் பின்னர் நாட்டில் மேற்கொள்ளப்பட்ட பாரிய புள்ளி விபரவியல் நடவடிக்கையான இலங்கையின் 13ஆவது தொகை மதிப்பினை (தொகை மதிப்பு-2001) வெற்றிகரமாக நிறைவுசெய்து கொண்டது.

இலங்கை அதன் முதலாவது தொகை மதிப்பினை ஒரு நூற்றாண்டிற்கும் மேல் அதாவது 1871இல் மேற்கொண்டது. அதன் பின்னர் 12 தொகை மதிப்புக்கள் 1881, 1891, 1901, 1911, 1921, 1931, 1946, 1953, 1963, 1971,1981 மற்றும் 2001 ஆகிய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டன. குடித்தொகை தொகை மதிப்பு பத்தாண்டு இடைவெளிகளில் நடத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டபோதும் 1991ஆம் ஆண்டு தொகை மதிப்பு மேற்கொள்ளப்படாமைக்கு அந் நேரத்தில் நாட்டில் நிலவிய பாதுகாப்பு நிலைமைகளே காரணமாக இருந்தன. இதன் விளைவாக தொகை மதிப்பு-2001, இரு தசாப்த கால இடைவெளியிலேயே நடத்தப்பட்டது. இடைப்பட்ட காலப்பகுதியில் நாடு பொருளாதார மற்றும் சமூகத் துறைகள் இரண்டிலும் விரைவான அமைப்பியல் மாற்றங்களுக்கு உட்பட்டிருந்ததுடன் வடக்கு மற்றும் கிழக்கின் நீண்ட உள்நாட்டு யுத்தத்திற்கும் முகம் கொடுத்தது. இது, தொகை மதிப்பு-2001இல் காட்டப்பட்ட குறிப்பிடத்தக்க குடிப்பரம்பல் மாற்றங்களுக்கு இட்டுச்சென்றது.

முன்னைய தொகை மதிப்புக்களைப் போலன்றி, தொகை மதிப்பு-2001 கோட்பாட்டு ரீதியான மற்றும் செயற்பாட்டு ரீதியான பல முன்னேற்றங்களை உள்ளடக்கியிருந்தது. முதலாவது, அடிப்படைக் குடும்ப அலகுத் தகவல்களுக்காக நாட்டின் அனைத்து மூன்று துறைகளான நகர, கிராம மற்றும் பெருந் தோட்டங்களிலுள்ள குடும்ப அலகுகள் முழுமையாகப் கணக்கிடப்பட்டன. முன்னைய தொகை மதிப்புக்களில் முழுமையான கணக்கெடுப்பு நகர குடும்ப அலகுகளில் மட்டுமே மேற்கொள்ளப்பட்ட வேளையில் கிராம மற்றும் பெருந்தோட்டங்களில் அத்தகைய தகவல்கள் தொகை மதிப்பு பிரிவின் 10 சதவீதத்திலிருந்து மட்டும் சேகரிக்கப்பட்டது. இரண்டாவது, குடித்தொகையில் உடல் ஊனமுற்றோரின் புள்ளிவிரங்களை சேகரிப்பதற்கான புதிய அட்டவைணயான உடல் ஊனமுற்றோர் அட்டவணையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. மூன்றாவது, இலங்கையை வதிவிடமாகக் கொண்ட ஆனால் தொகை மதிப்பு நடைபெறும் நேரத்தில் வெளிநாட்டிலுள்ள இலங்கையர் தொடர்பாகவும் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. இறுதியாக, தனிப்பட்டவர்கள் "உண்மைநிலை" [1] மற்றும் "சட்டப்படி" [2] இரண்டு முறைகளின் கீழும் கணக்கிடப்பட்டனர். எனினும் தொகை மதிப்பு - 2001,25 மாவட்டங்களில் 18 மாவட்டங்களில் மட்டுமே பூரணமான கணக்கீட்டினை மேற்கொண்டது. நாடு முழுவதிலுமுள்ள கட்டிட அலகுகள் பட்டியலிடப்பட்டு அதன்படி இலக்கிடப்பட்டபோதும் வடக்கு கிழக்குப் பகுதிகளில் நிலவிய தீர்க்கப்படாத பாதுகாப்புப் பிரச்சனைகளின் காரணமாக அம் மாகாணங்களிலிருந்து 7 மாவட்டங்களில் 3இல் கணக்கெடுப்பு பூரணமாக மேற்கொள்ளப்படாததுடன் 4இல் பகுதியளவான கணக்கெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. முன்னைய தொகை மதிப்புக்களுடன் இத் தரவுகளை ஒப்பிடுகையில் இது குறிப்பிட்ட வரையறைகளைத் தோற்றுவித்தது. அவ்வாறிருந்தாலும் கூட, தொகை மதிப்பு-2001 கடந்த இரு தசாப்தங்களாக இடம்பெற்ற குடிப்பரம்பல் மாற்றங்களில் முக்கியமாக கண்டறியப்பட்ட விடயங்களைத் தருகின்றது.

### 2. தொகை மதிப்பினை நடத்துதல்

தொகை மதிப்பு 2001இல் ஏறத்தாழ 100,000 கணக்கெடுப்பாளர்கள் பணியாற்றியதுடன் இது 4 கட்டங்களில் நடத்தப்பட்டது. அக் கட்டங்கள் பின்வருமாறு.

(i) கிராம அலுவலர் பிரிவுப் பிரதேச படங்களைத் தயாரித்தல். (மாச்சு 2000 இலிருந்து 2000 இறுதிவரை)

(ii) கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள கட்டட அலகுகளை முன்பட்டியலிடல். (2001 பெப்புருவரி முதல் வாரத்திலிருந்து 2001 மாச்சு நடுப்பகுதி வரை)

---

அ. ஒவ்வொரு ஆளையும் அவரின்/ அவளின் வழமையான வதிவிடத்தில் எண்ணிக் கணக்கிடுவது.

ஆ. ஒவ்வொரு ஆளையும் அவரின்/அவளின் வழமையான வதிவிடம் அமைந்திருக்கும் இடத்தைக் கவனத்தில் கொள்ளாது கணக்கீடு மேற்கொள்ளும் வேளையில் அவர்/ அவள் இருக்குமிடத்து எண்ணிக்கைகளைக் கணக்கிடுவதாகும்.

## சிறப்புக் குறிப்பு – 9 (தொடர்ச்சி)

(iii) பூர்வாங்க தொகை மதிப்பு (2001 யூன் 25ஆம் நாளிலிருந்து 5 யூலை வரை)

(iv) இறுதி தொகை மதிப்பு (17 யூலை 2001)

- முதலாவது கட்டத்தில் தற்போதுள்ள 14,113 கிராம அலுவலர்களது பிரிவுகளினது எல்லைகளைக் காட்டும் பிரதேசப் படங்கள் தயாரிக்கப்பட்டன. தொகை மதிப்பீட்டுத் தொழிற்பாட்டில் கிராம அலுவலர் பிரிவினை தனியொரு நிருவாகப் பிரிவாக கையாளுவதற்கு அது மிகப் பெரிதாக இருந்தமையினால் அவை தொகை மதிப்புப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டதுடன் அவை ஒவ்வொன்றும் ஏறத்தாழ 60-80 வீடுகளையும் அத்துடன்/அல்லது மற்றைய வகை கட்டிட அலகுகளையும் உள்ளடக்கியிருந்தன.

- இரண்டாவது கட்டத்தில், நாட்டிலுள்ள அனைத்து கட்டிட அலகுகளும் நான்கு வகைகளின் கீழ் பட்டியலிடப்பட்டன. அவையாவன வீடமைப்பு அலகுகள், கூட்டு குடியிருப்புத் தொகுதிகள், நிறுவனங்கள் மற்றும் வீடமைப்பு அலகுகளல்லாதவை என்பனவாகும். பட்டியலிடப்பட்ட அலகுகள் தொடராக இலக்கமிடப்பட்டதுடன் தொகை மதிப்பு சுட்டுத்துண்டான "சிவப்பு சுட்டுத்துண்டில்" எழுதப்பட்ட தனித்தன்மை வாய்ந்த அலகு எண் ஒவ்வொரு கட்டிட அலகினதும் துலாம்பரமான இடமொன்றில் ஒட்டப்பட்டது.

- தொகை மதிப்பின் ஆரம்பக் கட்டத்தில் தனிப்பட்ட ஒவ்வொருவரினதும், கட்டிட அலகுகளினதும் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டன. எனினும் வீடற்ற ஆட்கள், படைவீரர்கள் விடுதிகள், பொலிஸ் விடுதிகள் வைத்தியசாலைகள் மற்றைய நிறுவனங்களில் உள்ள ஆட்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவில்லை. சாலையோரம் வசிக்கும் வீடற்ற ஆள்/ஆட்களின் விபரம் இறுதித் தொகை மதிப்பில் உள்ளடக்கப்பட்டன. குறிப்பிடப்பட்ட மற்றைய வகைகளிலுள்ள தனிப்பட்டவர்களின் விபரங்கள் இறுதி தொகை மதிப்பிற்கு முன்னர் சேகரிக்கப்பட்டன.

இறுதித் தொகை மதிப்பு 2001 யூலை 17ஆம் நாளன்று பி.ப6.00 மணிக்கும் நள்ளிரவு 12.00 மணிக்குமிடையில் மேற்கொள்ளப்பட்டது. வசிப்பிடங்களுக்கு சென்று கணக்கிட்டோர் ஆரம்ப தொகை மதிப்பீட்டில் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு தனிப்பட்டவர்களுக்கும் பிரசன்னமாயிருப்பது பற்றி குறித்துக் கொண்டனர். மேலும் வெளிப்புற கணக்கெடுப்பாளர்கள் சாலையோரம் வசிப்பவர்களையும் (வீடற்றோர்) தொடர்பான இக்காலப்பகுதியில் பேருந்து நிலையங்கள், புகையிரத நிலையங்கள் இதையொத்த மக்கள் கூடுமிடங்களிலுள்ளவர் ஆகியோரையும் கணக்கெடுத்துக் கொண்டனர்.

இறுதித் தொகை மதிப்பு நிறைவடைந்ததும் கணக்கெடுப்பாளர்கள் அவர்கள் தொடர்பான தொகை மதிப்பு பிரிவுகளில் அவர்களால் கணக்கெடுக்கப் பட்டவர்கள் தொடர்பான தரவுத் தொகுப்பொன்றினை சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. கணக்கெடுப்பாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களினால் தயாரிக்கப்பட்ட தொகுப்பின் அடிப்படையில்,

அட்டவணை 1
தொகைமதிப்பு 2001இல் கணிக்கப்பட்ட குடித்தொகை மாவட்ட அடிப்படையில் ஆண்டு வளர்ச்சி வீதங்கள்

| மாவட்டம் | கணிக்கப்பட்ட குடித்தொகை | | சராசரி ஆண்டு வளர்ச்சி வீதம் (1981–2001) |
|---|---|---|---|
| | 1981 தொகை மதிப்பு | 2001 தொகை மதிப்பு | |
| 1. கொழும்பு | 1,699,241 | 2,234,289 | 1.3 |
| 2. கம்பகா | 1,390,862 | 2,066,096 | 1.9 |
| 3. களுத்துறை | 829,704 | 1,060,800 | 1.2 |
| 4. கண்டி | 1,048,317 | 1,272,463 | 1.0 |
| 5. மாத்தளை | 357,354 | 442,427 | 1.1 |
| 6. நுவரெலியா | 603,577 | 700,083 | 0.7 |
| 7. காலி | 814,531 | 990,539 | 1.0 |
| 8. மாத்தறை | 643,786 | 761,236 | 0.8 |
| 9. அம்பாந்தோட்டை | 424,344 | 525,370 | 1.1 |
| 10. அம்பாறை | 388,970 | 589,344 | 2.0 |
| 11. குருனாகல் | 1,211,801 | 1,452,369 | 0.9 |
| 12. புத்தளம் | 492,533 | 705,342 | 1.8 |
| 13. அநுராதபுரம் | 587,929 | 746,466 | 1.2 |
| 14. பொலநறுவை | 261,563 | 359,197 | 1.6 |
| 15. பதுளை | 640,952 | 774,555 | 0.9 |
| 16. மொனராகலை | 273,570 | 396,173 | 1.8 |
| 17. இரத்தினபுரி | 797,087 | 1,008,164 | 1.2 |
| 18. கேகாலை | 684,944 | 779,774 | 0.6 |
| உபமொத்தம் (அ) | 13,151,065 | 16,864,687 | 1.2 |
| ஏனைய ஏழு மாவட்டங்களின் துணைமொத்தம் (ஆ) | 1,695,685 | 1,867,568 | 0.5 |
| மொத்தம் | 14,846,750 | 18,732,255 | 1.2 |

(அ) இந்த 18 மாவட்டங்களும் முழுமையாகக் கணக்கிடப்பட்டன.
(ஆ) இந்த 7 மாவட்டங்களும் மட்டக்களப்பு (12 பிரிவுச் செயலாளர் பிரிவுகளில் 5 முழுமையாகக் கணக்கெடுக்கப்பட்டன. 6 ஓரளவு கணக்கெடுக்கப்பட்டன). திருகோணமலை (11 பிரிவுச் செயலாளர் பிரிவுகளில் 7 முழுமையாகக் கணக்கெடுக்கப்பட்டன. 2 ஓரளவு கணக்கெடுக்கப்பட்டன). மன்னார் (5 பிரிவுச் செயலாளர் பிரிவுகளில் ஒன்றில் ஓரளவு கணக்கெடுக்கப்பட்டது.) வவுனியா (4 பிரிவுச் செயலாளர் பிரிவுகளில் 1இல் முழுமையாகக் கணக்கெடுக்கப்பட்டது. 2இல் ஓரளவு கணக்கெடுக்கப்பட்டது.) யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு (23 பிரிவுச் செலாயர் பிரிவுகளில் ஒன்றில் கூட இறுதிக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவில்லை.

## சிறப்புக் குறிப்பு - 9 (தொடர்ச்சி)

தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம் தற்காலிகமான குடித்தொகை புள்ளிவிபரங்களையும் கணக்கெடுப்பு முடிவடைந்த 18 மாவட்டங்களுக்கான குடித்தொகையின் தற்காலிக மதிப்பீடுகளை பால், வயது, இனம், சமயம் மற்றும் ஏனைய துறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் வெளியிடப்பட்டன. தொகை மதிப்பு-2001 கணக்கெடுப்பு முன்னர் சொல்லப்பட்ட தகவல்கள் பகுதியளவு முடிவடைந்த 4 மாவட்டங்கள் தொடர்பான தகவல்கள் கிடைக்குமிடத்து சம்பந்தப்பட்ட மாவட்ட அட்டவணைகளில் அவை வெளியிடப்பட்டன. தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம் தொகை மதிப்பின் ஆரம்ப கட்டங்களில் 25 மாவட்டங்களிலிருந்தும் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மொத்த குடித்தொகை மதிப்பீடுகளை வெளியிட்டது. அட்டவணை 1 தொகை மதிப்பு-2001இல் 6.3 சதவீதமான குடித்தொகையினர் மட்டுமே கணக்கெடுக்கப்படவில்லை.

நிறைவுபெறாத தரவுத்தொகுதி, கடந்த இருபதாண்டு காலப்பகுதியில் முழு நாட்டிலும் இடம்பெற்ற குடித்தொகையில் பெற்றவைகளை முழுமையாக ஆய்வு செய்வதனை தடைசெய்கிறது. எனினும், முன்னைய தொகை மதிப்பிலிருந்தான தகவல்களையும், தொகை மதிப்பு-2001 இல் கிடைக்கத்தக்கதாகவுள்ள தகவல்களையும் பயன்படுத்தி நாடு முழுவதற்குமான, அதேபோன்று 18 மாவட்டங்களுக்குமான நீண்டகால போக்குகள் மற்றும் குடிப்பரம்பல் மாற்றங்களை விரிவாகப் பகுப்பாய்வு செய்யமுடியும்.

### 3. குடிப்பரம்பல் மாற்றங்களின் முக்கிய பண்புகள்

தொகை மதிப்பு-2001 கடந்த ஐந்து தசாப்தங்களாக இலங்கையின் குடிப்பரம்பல் குறிப்பிடத்தக்க அமைப்பியல் மாற்றங்களுக்கு உட்பட்டு வந்துள்ளமையை உறுதிப்படுத்துவதாகவுள்ளது. அம் மாற்றங்களாவன:

- இறுதித் தொகை மதிப்பு இரவன்று 18 மாவட்டங்களிலும் கணக்கெடுக்கப்பட்ட மொத்தக் குடித்தொகை 16,864,687 ஆகும். இது தொகை மதிப்பு-1981இற்கும் தொகை மதிப்பு-2001இற்குமிடையில் ஆண்டு சராசரி வளர்ச்சி வீதம் ஏறத்தாழ 1.2 சதவீதமாக இருந்தமையையும் 1960களின் பின்னர் குடித்தொகை வளர்ச்சி வீதத்தில் தொடர்ச்சியான வீழ்ச்சிப்போக்கு காணப்படுவதனையும் உறுதிப்படுத்தியது. 1963 குடித்தொகை மதிப்பில் 2.7 சதவீதமாகக் காணப்பட்ட குடித்தொகை வளர்ச்சி வீதம் 1971இல் 2.3 சதவீதத்திற்கும் 1981இல் 1.6 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தது.
- ஓரளவு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்ட 7 மாவட்டங்களிலிருந்தும் மற்றைய 18 மாவட்டங்களின் இறுதிக் குடித்தொகை எண்களிலிருந்தும் சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் 2001இல் இலங்கையின் குடித்தொகை 18.73 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. பிறப்பு வீதங்கள் குறைவடைந்து செல்வதற்குப் புறம்பாக, தொழில்வாய்ப்பிற்காகவும், நீண்ட உள்நாட்டு யுத்தம் காரணமாகவும் பெருமளவிற்குப் புலம் பெயர்ந்தமையும் கடந்த 20 ஆண்டுகளாக காணப்பட்ட மோதல்களினால் ஏற்பட்ட உயிரிழப்புக்களும் குறைந்த குடித்தொகை வளர்ச்சிக்கு காரணமாகலாம்.
- மாவட்டங்களுக்கிடையே வளர்ச்சி வீதம் வேறுபட்டுக் காணப்பட்டது. 18 மாவட்டங்களில் 6 மாவட்டங்களின் வீதம் பொதுவான சராசரியான 1.2 சதவீதத்தினை விட உயர்வாக இருந்தது. அவையாவன கொழும்பு, கம்பகா, அம்பாறை, புத்தளம், பொலனறுவை மற்றும் மொனராகலை என்பனவாகும். கம்பகாவிலும், கொழும்பிலும் காணப்பட்ட உயர்ந்த வளர்ச்சி வீதங்கள் இம் மாவட்டங்களில் காணப்பட்ட அதிகரித்த பொருளாதார நடவடிக்கைகளையும் தொழில் வாய்ப்பிற்காகவும் ஏனைய பொருளாதாரக் காரணங்களுக்குமாக இப் பிரதேசங்களுக்குள் மக்கள் புலம் பெயர்ந்தமையை பெரும்பாலும் பிரதிபலித்த வேளையில் மற்றைய நான்கு மாவட்டங்களின் அதிகரிப்பிற்கு வடக்கு கிழக்கு மாகாணங்களில் காணப்பட்ட குழப்பமான பிரதேசங்களிலிருந்து இந்த எல்லை மாவட்டங்கள் நான்கிற்கும் மக்கள் புலம் பெயர்ந்தமை காரணமாகலாம்.
- பால்வீதம் அல்லது குடித்தொகையிலுள்ள ஒவ்வொரு 100 பெண்களுக்கும் ஆண்களின் எண்ணிக்கை 1946இல் 113ஆக விளங்கி 1981இல் 104இற்கும் 2001இல் 98இற்கும் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்தது. இது பெண்கள் குடித்தொகை விகிதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் அண்மைய ஆண்டுகளில் தொழிற்படை பங்கேற்பில் பெண்களின் பங்கு அதிகரித்தமை என்பனவற்றை பிரதிபலித்தது.
- இலங்கையின் குடிப்பரம்பல் பண்பின் மைய அம்சம் பிறப்பு வீதத்தில் காணப்படும் நீண்டகால வீழ்ச்சியாகும். பெண் ஒருவருக்கான சராசரி பிறப்பு எண்ணிக்கை என வரைவிலக்கணம் செய்யப்படும் மொத்த பிறப்பு வீதம் 1953இன் 5 பிறப்புக்களிலிருந்து 1981இல் 3 பிறப்புக்களுக்கு வீழ்ச்சியடைந்தது. இது 1982-87இல் 2.8 பிறப்புக்களுக்கும் 1995-2000 காலப்பகுதியில் 2.0 பிறப்புகளுக்கும் மேலும் வீழ்ச்சியடைந்தது. பெண்களுக்கான வருமான உருவாக்கத்துக்காக பெருமளவில் காணப்படும் உள்ளார்ந்த ஆற்றல், குழந்தை நலக்கவனிப்பிற்கு

## சிறப்புக் குறிப்பு - 9 (தொடர்ச்சி)

அட்டவணை 2
குடித்தொகையியல்

| | ஆண்டு | | |
|---|---|---|---|
| | 1971 | 1981 | 2001 |
| குடித்தொகை (000) | 12,690 | 14,847 | 18,732 |
| வளர்ச்சி வீதம் | 2.2 | 1.6 | 1.2 |
| அடர்த்தி (சதுர கிலோமீற்றருக்கு குடித்தொகை) | 196 | 230 | 299 |
| பால் விகிதம் | 106 | 103.9 | 97.9 (அ) |
| 18 வயதுக்கு கீழுள்ளோர் வீதம் | 49.6 | 41.6 | 32.9 (அ) |
| 18 வயதுக்கு மேலுள்ளோர் வீதம் | 50.4 | 58.4 | 67.1 (அ) |

(அ) முழுமையாகக் கணக்கிடப்பட்ட 18 மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்டது.

அத்தியாவசியமான பொருட்களுக்காக குடும்ப அலகுச் செலவின் பங்கில் குறைப்பு அதன் மூலம் குடித்தொகையின் பொதுவான வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தக்கூடிய கல்வி போன்ற மனித மூலவள முதலீடுகளின் மீது தலைக்குரிய செலவினத்தின் அதிகரிப்பினையும் ஏற்படுத்தல் போன்ற நீண்ட காலத்தில் வரவேற்கத்தக்க சில பொருளாதார விளைவுகளை இது தோற்றுவிக்கலாம்.

- பெரும்பாலான ஆசிய நாடுகளில் உள்ளதைப் போன்று இலங்கையின் குடித்தொகையும் வயது முதிர்ந்ததாகவுள்ளது. 65 வயதிற்கு மேற்பட்டவர்களின் விகிதம் 1963 வரை 3.6 சதவீதமாகவும், 1971இல் 4.2 சதவீதத்திற்கும், 1981இல் 5.4 சதவீதத்திற்கும் அதிகரித்தது. தொகை மதிப்பு-2001இல் தொடர்பான வயது அமைப்பு விகிதாசாரம் ஏறத்தாழ 7 சதவீதத்திற்கு மேலும் அதிகரிப்பதனை எடுத்துக்காட்டியது.


- முழுமையாகக் கணக்கிடப்பட்ட 18 மாவட்டங்களில் 18 வயதிற்குக் குறைவான குடித்தொகையின் விகிதம் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. தொகை மதிப்பு-1981இல் ஐந்தில் இரண்டு பங்கிற்கும் கூடுதலான குடித்தொகை (41.6%) 18 வயதிற்கும் கீழ் காணப்பட்டதவிடத்து தொகை மதிப்பு-2001இல் இதன் பங்கு குடித்தொகையின் மூன்றிலொரு பங்கிற்கு (32.9.0) வீழ்ச்சியடைந்தது. இப் பெயர்ச்சி குடித்தொகையில் வயது குறைந்த வயதினர்களின் கூம்பை குறுக்கமடையச் செய்தமைக்கு 1980களில் அறிவிக்கப்பட்ட தாழ்ந்த பிறப்பு வீதங்களே காரணமாக இருக்கக்கூடும்.


- அம்பாறை மாவட்டம் 18 வயதிற்கு குறைந்த ஆட்களின் உயர்ந்த விகிதத்தினையும் (39.8%) கொழும்பு மாவட்டம் மிகக் குறைந்த விகிதத்தினையும் (27.1%) கொண்டிருந்தது. 18 மாவட்டங்களில் 14 மாவட்டங்கள் பொதுவான சராசரியினை விட உயர்ந்த இளம் குடித்தொகையினரைக் கொண்டிருந்தவேளையில் 4 மாவட்டங்கள் மட்டும் குறைந்த விகிதாசாரத்தினைக் கொண்டிருந்தன. ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த இளம் வயது குடித்தொகையினைக் கொண்ட பெரும்பாலான மாவட்டங்களில் இளைஞர் சார்ந்த அபிவிருத்தி உபாயங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு முன்னுரிமை யளிக்கப்பட வேண்டிய தேவை வலியுறுத்தப்பட வேண்டும்.

- இலங்கையின் இனரீதியான குடித்தொகைப் பங்கீட்டில் பெரும் மாற்றங்கள் எதுவுமில்லை. வேறுபட்ட இனத் தொகுதியினரிடையே பங்குகளின் பெயர்வு 02இலிருந்து 1.3 வரையில் காணப்பட்டது.

குறிப்பாக குடித்தொகை வளர்ச்சி, வயது மற்றும் புவியியல் பரம்பல் ஆகிய நியதிகளில் குடித்தொகையில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க அமைப்பியல் மாற்றங்கள் கல்வி, வயது முதிர்ந்தோருக்கான சமூக பாதுகாப்பு மற்றும் தொழில்நிலை உருவாக்கம் ஆகிய துறைகளில் நீண்டகாலத் திட்டங்களை வகுப்பதில் குறிப்பிடத்தக்க சிக்கல்களைத் தோற்றுவிக்கும். தொகை மதிப்பு-2001இன் மிக முக்கிய விளைவுகளில் ஒன்று பொதுவான அபிவிருத்திக்கும் குறிப்பாக, பிராந்திய அபிவிருத்திக்குமாக கொள்கை வகுப்போருக்கும் திட்டமிடுவோருக்கும் மிக இன்றியமையாததாகத் தேவைப்படும் இலங்கையின் குடித்தொகையியல் தரவுகள் 20 ஆண்டு கால இடைவெளிக்குப் பின்னர் தற்பொழுது கிடைக்கத்தக்கதாக இருப்பதேயாகும்.

வரைபடம் 1



தொழிலாளர் நிரம்பல் ஆகியன 1998-2001 காலப்பகுதியில் இலங்கைத் தொழிலாளர் சந்தையின் இரு முதன்மைப் பண்புகளாகக் காணப்பட்டன. குறுங்காலத்தில் இது தங்கியிருப்போர் விகிதத்தினை அதிகரித்து, சேமிப்புக்களையும் அதன் மூலம் மூலதனவாக்கத்தினையும் குறைத்துவிடுகின்றது. நாட்டின் உற்பத்தியின் முக்கிய காரணியாக தொழிலாளர் இருப்பதனால் தொழிற்படை பங்கேற்பு வீதத்தில் ஏற்படும் வீழ்ச்சியின் நீண்டகாலத் தாக்கம் உள்ளார்ந்த பொருளாதார வளர்ச்சியின் மெதுவான விரிவாக்கத்தினை ஏற்படுத்துவதாக இருக்கும். ஆகவே, சுருங்கிவரும் தொழிற்படை பங்கேற்பு வீதம் தொழிலாளர் உற்பத்தியாக்கத்தின் வலுவான வளர்ச்சியின் மூலம் ஈடுசெய்யப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது.

அதேவேளை, 2001இல் உள்நாட்டிலும், பன்னாட்டிலும் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலின் காரணமாக பறப்புக்களில் மட்டுப்படுத்தல்களும் புறப்பட்டுச் செல்வதில் தாமதங்களும் காணப்பட்டபோதும் வெளிநாட்டுத் தொழில் துறையில் உறுதியான முன்னேற்றம் அடையப்பட்டது. வெளிநாட்டுத்தொழில் வாய்ப்பிற்காகச் சென்ற பதிவுசெய்யப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 2000ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 184,000இற்கு 3000 ஆட்களினால் அதிகரித்து 2001ஆம் ஆண்டிற்கான எறிவு செய்யப்பட்ட இலக்கினை விஞ்சியது.

## 7.2 குடித்தொகை

20 ஆண்டு கால இடைவெளிக்குப் பின்னர் 2001ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் தொகைமதிப்புப் புள்ளி விபரவியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட குடித்தொகை மற்றும் வீடமைப்பு-2001 பற்றிய தொகைமதிப்பு 2001இல் இலங்கையின் குடித்தொகை புள்ளிவிபரத்தில் மிக முக்கியமானதொரு சாதனையாக இருந்தது. (குடித்தொகை வீடமைப்பு தொகைமதிப்பு-2001 பற்றிய சிறப்புக் குறிப்பினைப் பார்க்கவும்) கடந்த காலத்தில் ஒவ்வொரு 10 ஆண்டு இடைவெளிகளில் தொகைமதிப்புக்கள் கிரமமாக நடத்தப்பட்டபோதும், நாட்டில் காணப்பட்ட தீர்க்கப்படாத பாதுகாப்பு நிலைமைகளின் காரணமாக 1991இல் தொகைமதிப்பு மேற்கொள்ளப்படவில்லை. தொகைமதிப்பு-2001 இலங்கையில் நடத்தப்பட்ட 13ஆவது தொகைமதிப்பாக இது இருந்ததுடன், முன்னையது 1981இல் நடத்தப்பட்டது.

தொகைமதிப்பு-2001 நான்கு கட்டங்களாக நடத்தப்பட்டதுடன் முதல் இரு கட்டங்களும் நாட்டிலுள்ள அனைத்து 25 மாவட்டங்களிலும் முற்றுப்பெற்றன. எனினும் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள குறிப்பிட்ட சில பகுதிகளில்

அட்டவணை 7.1
குடித்தொகை மற்றும் வீடமைப்புத் தொகை 1981 – 2001 மதிப்பீட்டிலிருந்தான தெரிந்தெடுக்கப்பட்ட குறிகாட்டிகள்

| | 2000 | 2001 |
|---|---|---|
| 1.குடித்தொகை (மில்லியன்கள்) | | |
| 18 மாவட்டங்கள் (அ) | 13.1 | 16.8 |
| 7 மாவட்டங்கள் (ஆ) | 1.7 | 1.9 |
| அனைத்து மாவட்டங்களும் | 14.8 | 18.7 |
| 2.ஆண்டுச் சராசரி வளர்ச்சி வீதம் (%) | 1.6 | 1.2 |
| 3.பால் பரம்பல் (விகிதம்) | | |
| 100 பெண்களுக்கு ஆண்கள் | 103.9 | 97.9 |
| 4.வயதுப் பரம்பல் (%) | | |
| 18 வயதிற்குக் கீழ்ப்பட்டோர் | 41.6 | 32.9 |
| 18 வயதும் அதற்கு மேலும் | 58.4 | 67.1 |

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்.

(அ) 1981 மற்றும் 2001ஆம் ஆண்டு குடிமதிப்புக்களில் மொத்தமாகக் கணக்கிடப்பட்டது.

(ஆ) 1981 குடிமதிப்பில் மொத்தமாகவும் 2001இல் ஒரு பகுதியாகவும் கணக்கிடப்பட்டது.

காணப்படும் பாதுகாப்பு நிலைமைகளின் காரணமாக தொகைமதிப்பு புள்ளவிபரவியல் திணைக்களத்தினால் மூன்றாவதும் மற்றும் இறுதியுமான கட்டங்களை அனைத்து மாவட்டங்களிலும் நிறைவு செய்துகொள்ள முடியவில்லை. இதன்படி, இறுதித் தொகைமதிப்பு 18 மாவட்டங்களில் மட்டுமே முழுமையாகக் கணக்கிடப்பட்டது. எனினும் வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள எஞ்சிய ஏழு மாவட்டங்களினதும் குடித்தொகை பகுதியளவான கணக்கீடுகளிலிருந்து கிடைக்கத்தக்கதாக இருந்த தரவுகளைப் பயன்படுத்தி மதிப்பிடப்பட்டது. தொகைமதிப்பு-2001 இன் மதிப்பீடுகளின்படி மொத்தக் குடித்தொகை 18.7 மில்லியன் ஆட்களாகக் காணப்பட்டது. ஆண்டு வளர்ச்சி வீதம் 1981 இலிருந்து 2001 வரையிலான 20 ஆண்டுக் காலப்பகுதியில் 1.2 சதவீதமாக மதிப்பிடப்பட்டது. குடித்தொகை மற்றும் வீடமைப்பு-1981இன் படி குடித்தொகை 14.8 மில்லியன் ஆட்களாகக் காணப்பட்டது.

அட்டவணை 7.2
தெரிந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் 1981இலிருந்து 2001வரையான ஆண்டுச் சராசரிக் குடித்தொகை வளர்ச்சி வீதங்கள்

| மாவட்டம் | % |
|---|---|
| அம்பாறை | 2.0 |
| கம்பகா | 1.9 |
| மொனராகலை | 1.8 |
| புத்தளம் | 1.8 |
| பொலநறுவை | 1.6 |
| கொழும்பு | 1.3 |
| கேகாலை | 0.6 |
| அனைத்தும் | 1.2 |

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்.

குறிப்பிட்ட மாவட்டங்களில் குடித்தொகையின் சராசரி ஆண்டு வளர்ச்சி வீதங்கள் நாட்டின் பொதுவான வளர்ச்சி வீதத்திலிருந்தும் வேறுபடும் அளவு, இக் காலப்பகுதியில் இடம்பெற்ற பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திகளைப் பிரதிபலிப்பதாகவுள்ளது. அம்பாறை மாவட்டத்தில் காணப்பட்ட 2.0 சதவீதம் கொண்ட உயர்ந்த சராசரி ஆண்டு வளர்ச்சி வீதத்திற்கு மகாவலி திட்டத்தின் கீழான புதிய குடியேற்றங்களே காரணமாக இருந்தன.

உயர்ந்த சராசரி ஆண்டுக் குடித்தொகை வளர்ச்சி வீதமான 1.9 சதவீதம் கம்பகா மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டமையானது பொருளாதாரக் காரணங்களுக்காக, குறிப்பாக ஏற்றுமதி பதனிடல் வலயங்களுக்கு கேகாலை மாவட்டம் போன்ற எல்லை மாவட்டங்களிலிருந்தான உள்ளக குடியேற்றங்கள் ஏற்பட்டமையை தெளிவாகக் காட்டுவதாக இருந்தது. கேகாலை மாவட்டம் மிகக் குறைந்த குடித்தொகை வளர்ச்சி வீதமான 0.6 சதவீதத்தினைக் கொண்டிருந்தது. மேலும், கொழும்பு மாவட்டத்தின் குடித்தொகை வளர்ச்சி வீதம் 1.3 சதவீதமாக அமைந்து பொதுவான வீதத்தினை விட சிறிதளவு உயர்வாக இருந்தது. கம்பகாவிற்கும், கொழும்பைச் சுற்றியுள்ள புறநகர்ப் பகுதிகளிலும் அதிகரித்த குடியேற்றங்களுக்கு மேலுமொரு சான்றாக, இப் பகுதிகளில் 1981இலிருந்து 2001 வரையான காலப்பகுதியில் சொத்து அபிவிருத்தியாளர்களினால் நடத்தப்பட்ட காணி நிலங்களின் ஏலங்களைக் காட்டலாம்.

வடக்கு கிழக்கு எல்லைகளிலுள்ள மாவட்டங்களின் வளர்ச்சி வீதங்கள் 1983இன் பின்னர் அப் பிரதேசங்களில் காணப்படும் தீர்க்கப்படாத பாதுகாப்பு நிலைமையைப் பிரதிபலித்ததுடன் இவை நாட்டின் குடித்தொகைப் பரம்பலின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினையும் கொண்டிருந்தன. கிழக்கு மாகாணத்தின் எல்லை மாவட்டங்களான மொனராகலை மற்றும் பொலனறுவை மாவட்டங்களின் வளர்ச்சி வீதங்கள் முறையே 1.8 சதவீதமாகவும், 1.6 சதவீதமாகவும் விளங்கிய வேளையில் வடமாகாணத்தின் எல்லை மாவட்டமான புத்தளம் மாவட்டத்தின் வளர்ச்சி வீதம் 1.8 சதவீதமாக அமைந்து மோதல் பிரதேசங்களிலிருந்து தெற்கு நோக்கி குடியேற்றம் நிகழ்ந்தமையைப் பிரதிபலித்தது.

தொகைமதிப்பு நடத்தப்பட்ட 1981இற்கும் 2001இற்குமிடையில் 18 வயதிற்குக் கீழ்பட்ட குடித்தொகையின் விகிதாசாரம் வீழ்ச்சியடைந்தமை வயது முதிர்ந்த குடித்தொகைக்கான சான்றாகவுள்ளது. 18 வயதிற்கு குறைவான குடித்தொகையின் சதவீதப்பங்கு 1981இன் 41.6 சதவீதத்திலிருந்து 2001இல் 32.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதேபோன்று 18 வயதினையும் அதற்கு மேற்பட்டவர்களையும் கொண்ட குடித்தொகை 1981இல் 58.4 சதவீதத்திலிருந்து 2001இல் 67.1 சதவீதத்திற்கு அதிகரித்தது. வயது முதிர்ந்த குடித்தொகை தற்போதைய குடித்தொகையியல் அமைப்புடன் சேர்ந்து காணப்படும் சமூக பொருளாதார அம்சங்களில் முக்கியமானதொன்றாகக் காணப்படுவதுடன் அவசர கவனத்தை வேண்டிநிற்கும் போக்கினையும் கொண்டுள்ளது. அபிவிருத்தியடைந்த பெரும்பாலான நாடுகளைப் போலன்றி இலங்கையின் வயது முதிர்ந்த குடித்தொகைப் பிரச்சனை சில அபூர்வமான பண்புகளைக் கொண்டுள்ளது. நீண்ட வாழ்காலம் மற்றும் குறைவடைந்து செல்லும் பிறப்புவீதம் என்பனவற்றின் காரணமாக அபிவிருத்தியடைந்துவரும் நாடொன்றில் வழமைக்கு மாறாக குடித்தொகை மாற்றத்திற்கு உட்படுவதன் விளைவாக இது ஏற்படுகின்றது. எனினும், இலங்கை மிகக் குறைந்த தலைக்குரிய வருமான மட்டத்துடன் இவ்வந்தஸ்தை அடைந்து கொண்டது. பின்னையது எதிர்காலத்தில் நாட்டில் வயது முதிர்ந்த குடித்தொகைக்கான சமூக பாதுபாப்பினை வழங்குவதற்கு தேவையான நிதிகளை ஒதுக்குவதில் அரச வரவுசெலவுத்திட்டங்களின் மீது தானாவே கடுமையான மூலவளத் தடைகளை ஏற்படுத்துவதுடன் இதன் மூலம் நலத்துறை, காப்புறுதி போன்ற துறைகளில் பெருமளவு தனியார்துறைப் பங்கேற்பினையும் தனியார் ஓய்வூதிய நிதிகளின் தேவையினையும் வலியுறுத்தியது. தொழிற்படை பங்கேற்பு வீதங்களினால் அளவிடப்பட்டவாறு வயது முதிர்ந்தோர் பிரச்சனை தொழிலாளர் நிரம்பல் மட்டத்தின் மீதும் நேரடியான தாக்கத்தினைக் கொண்டுள்ளது.

குடித்தொகையில் பெண்களில் ஏற்பட்ட அதிகரிப்பு, குடித்தொகையில் ஒவ்வொரு 100 பெண்களுக்கும் ஆண்களின் எண்ணிக்கை என வரைவிலக்கணம் செய்யப்பட்ட பால் விகிதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியின் மூலம் தெளிவாக எடுத்துக் காட்டப்படுகிறது. பால் விகிதம் 1981இன் 103.9 சதவீதத்திலிருந்து 2001இல் 97.9 இற்கு வீழ்ச்சியடைந்தது.

## 7.3 தொழிற்படை

10 வயதினையும், அதற்கு மேற்பட்ட வயதினையும் வேலை செய்யக்கூடிய மற்றும் வேலை செய்ய ஆர்வம் கொண்ட ஆட்களைக் கொண்டது என வரைவிலக்கணம் செய்யப்பட்ட தொழிற்படை 2000ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டுடன் ஒப்பிடுகையில் 2001இன் மூன்றாம் காலாண்டில் 21,000 ஆட்களினால் 6.73 மில்லியனுக்கு அதிகரித்தது. தொழிற்படை தொழிலுள்ள, தொழிலற்ற இருவரையும் உள்ளடக்குகிறது. 21000 கொண்ட அதிகரிப்பு தொழிலுள்ளோரின் எண்ணிக்கை ஏறத்தாழ 10,000 இனால் வீழ்ச்சியடைந்தமையையும்

அட்டவணை 7.3
தொழிற்படை பங்கேற்பு

| காலம் | | குடும்ப அலகுகளின் குடித்தொகை (அ)('000 ஆட்கள்) | தொழிற்படை ('000 ஆட்கள்) | தொழிலில் உள்ளோர் ('000 ஆட்கள்) | தொழில் அற்றோர் ('000 ஆட்கள்) | தொழிற் படை பங்கேற்பு வீதம் (%)(ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | ஆண் | பெண் | அனைவரும் |
| 1992 | | 12,058 | 5,808 | 4,962 | 846 | 64.3 | 31.1 | 48.2 |
| 1993 | | 12,278 | 6,032 | 5,201 | 831 | 65.3 | 33.1 | 49.1 |
| 1994 | | 12,493 | 6,079 | 5,281 | 798 | 65.4 | 32.0 | 48.7 |
| 1995 | | 12,736 | 6,106 | 5,357 | 749 | 64.4 | 31.7 | 47.9 |
| 1996 | | 12,831 | 6,242 | 5,537 | 705 | 65.9 | 31.6 | 48.7 |
| 1997 | | 12,871 | 6,266 | 5,608 | 658 | 65.7 | 32.0 | 48.7 |
| 1998 | | 12,882 | 6,661 | 6,049 | 611 | 67.3 | 36.4 | 51.7 |
| 1999 | | 13,169 | 6,673 | 6,082 | 510 | 67.7 | 34.1 | 50.7 |
| 2000 | | 13,572 | 6,827 | 6,310 | 591 | 67.2 | 33.9 | 50.3 |
| 2000 | 1ஆம்காலாண்டு | 13,498 | 6,854 | 6,308 | 546 | 67.4 | 34.2 | 50.8 |
| | 2ஆம்காலாண்டு | 13,543 | 7,042 | 6,549 | 493 | 68.0 | 36.0 | 52.0 |
| | 3ஆம்காலாண்டு | 13,587 | 6,705 | 6,172 | 533 | 66.6 | 32.9 | 49.4 |
| | 4ஆம்காலாண்டு | 13,631 | 6,709 | 6,212 | 497 | 66.7 | 32.5 | 49.2 |
| 2001 | | | | | | | | |
| | 1ஆம்காலாண்டு | 13,676 | 6,731 | 6,212 | 518 | 66.8 | 31.9 | 49.2 |
| | 2ஆம்காலாண்டு (இ) | வி.கி. | வி.கி. | வி.கி. | வி.கி. | வி.கி. | வி.கி. | வி.கி. |
| | 3ஆம்காலாண்டு | 13,926 | 6,730 | 6,202 | 528 | 66.0 | 31.5 | 48.3 |

(அ) பத்து வயதும் அதற்கு மேற்பட்ட குடும்ப அலகுகளின் குடித்தொகை.
(ஆ) குடும்ப அலகுகளின் குடித்தொகையில் தொழிற்படையின் வீதம்.
(இ) 2001-2002ஆம் ஆண்டுகளுக்கான காலாண்டுத் தொழிற்படை அளவீடு தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடத்தப்படவில்லை.

மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்.

தொழிலற்றோர் எண்ணிக்கை ஏறத்தாழ 31,000 இனால் அதிகரித்தமையையும் பிரதிபலிக்கின்றன. அதேநேரம் 10 இனையும் அதற்கு மேற்பட்ட வயதினையும் கொண்ட குடியிருப்பாளர் குடித்தொகை 294,000 இனால் உயர்வடைந்தது. எனவே தொழிற்படைப் பங்கேற்பு வீதம் அதாவது 10 இனையும் அதற்கு மேற்பட்ட வயதினையும் கொண்ட குடியிருப்பாளர் குடித்தொகைக்கான தொழிற்படையின் விகிதம் 2000ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டின் 49.2 சதவீதத்திலிருந்து 2001ஆம் ஆண்டின் 3ஆம் காலாண்டில் 48.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. தொழிற்படைப் பங்கேற்பு வீதம் கடந்த நான்கு ஆண்டுகளில் தொடர்ச்சியாகவும், உறுதியாகவும் ஆனால் மெதுவாகவும் 1998இன் 52 சதவீதத்திலிருந்து 2001இல் 48 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமை குறிப்பிடத்தக்கதொரு அம்சமாகும். இக் காலப்பகுதியில் ஆண் மற்றும் பெண்களின் தொழிற்படைப் பங்கேற்பு வீதம் வீழ்ச்சியடைந்ததுடன் பெண்களின் வீதம் ஆண்களைக் காட்டிலும் மிகக் கூடுதலாக வீழ்ச்சியடைந்தது.

1998இல் தொகைமதிப்பு புள்ளி விபரவியல் திணைக்களம் கூலி வழங்கப்படாத குடும்ப வேலையாட்களையும், தொழிற்படையில் பதிவு செய்யும் விதத்தில் தொழிற்படை உள்ளடக்கும் பரப்பினை விரிவாக்கிக் கொண்டது. இதன்படி, அந்த ஆண்டிலிருந்து ஒப்பீட்டுத் தொடர்களில் பகுப்பொன்று காணப்பட்டது. எனினும் அப்போதிலிருந்த வரைவிலக்கணங்கள் தொடர்ந்துமிருந்தன. எனவே 1998 இலிருந்து தொழிற்படைப் பங்கேற்பு வீதத்தில் ஏற்பட்ட திரண்ட தொடர்ச்சியான வீழ்ச்சி கரிசனைக்குரியதொரு விடயமாகவுள்ளது.

## 7.4 தொழில்நிலை

தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட காலாண்டு தொழிற்படை அளவீட்டின்படி தற்பொழுது தொழில்புரியும் ஒருவர் என்பது கொடுப்பனவிற்காக, இலாபத்திற்காக அல்லது குடும்பத்தின் நன்மைக்காக கொடுப்பனவின்றி தரவு சேகரிக்கப்படுவதற்கு முன்பாக ஒரு கிழமையில் ஒரு மணித்தியாலம் அல்லது அதற்கு மேல் பணியில் ஈடுபட்டவர் என வரைவிலக்கணம் செய்யப்படுகிறது. நோய், மோசமான வானிலை மற்றும் தொழிலாளர் தகராறு போன்ற காரணிகளின் காரணமாக தற்காலிகமாக தொழிலின்றி இருக்கும் ஒருவரும் தொழிலிலிருப்பவராகவே கருதப்படுகின்றார்.

தொழிலுள்ள தொழிற்படையின் சதவீதம் 2000ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், கடந்த தசாப்த காலமாக நிலவிய உயர்ந்து செல்லும் போக்கிற்கு மாறாக, 2001இன் மூன்றாம் காலாண்டின் இறுதியில் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. காலாண்டு தொழிற்படை அளவீட்டின் படி, தொழிலிலுள்ளோரின் மொத்தத் தொகை 1990இன் தொழிற்படையில் 84.1

## அட்டவணை 7.4
## தொழில்நிலை

சதவீதம்

| காலம் | தொழில்நிலை | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | அரச துறை ஊழியர் | தனியார் துறை ஊழியர் | தொழில் தருநர் | சுய தொழில் | கொடுப்பனவுகளற்ற குடும்ப தொழிலாளர் | மொத்தம் |
| 1992 | 20.0 | 40.0 | 1.6 | 27.1 | 11.2 | 100 |
| 1993 | 17.4 | 42.8 | 2.0 | 27.4 | 10.4 | 100 |
| 1994 | 16.4 | 44.3 | 2.3 | 27.2 | 9.8 | 100 |
| 1995 | 15.6 | 44.3 | 2.5 | 28.3 | 9.4 | 100 |
| 1996 | 15.0 | 45.8 | 2.3 | 26.8 | 10.0 | 100 |
| 1997 | 15.1 | 44.3 | 2.3 | 28.8 | 9.4 | 100 |
| 1998 | 14.5 | 41.2 | 1.9 | 28.9 | 13.6 | 100 |
| 1999 | 14.4 | 43.1 | 2.0 | 28.3 | 12.2 | 100 |
| 2000 | 13.5 | 43.7 | 2.4 | 28.4 | 12.1 | 100 |
| 1ஆம் காலாண்டு | 13.8 | 43.9 | 2.1 | 27.0 | 13.2 | 100 |
| 2ஆம் காலாண்டு | 13.9 | 41.9 | 2.1 | 27.3 | 14.8 | 100 |
| 3ஆம் காலாண்டு | 13.0 | 43.9 | 2.7 | 28.6 | 11.9 | 100 |
| 4ஆம் காலாண்டு | 12.8 | 41.9 | 2.5 | 30.8 | 12.0 | 100 |
| 2001(அ) | | | | | | |
| 1ஆம் காலாண்டு | 14.7 | 43.0 | 2.5 | 29.5 | 10.4 | 100 |
| 2ஆம் காலாண்டு | வி.கி. | வி.கி. | வி.கி. | வி.கி. | வி.கி. | வி.கி. |
| 3ஆம் காலாண்டு | 13.0 | 47.8 | 2.2 | 27.0 | 10.0 | 100 |

மூலம்: குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்.

(அ) தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2001-2001ஆம் ஆண்டுக்கான காலாண்டுத் தொழிற்படை அளவீடு நடாத்தப்படவில்லை.

சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 92.4 சதவீதத்திற்கு உயர்வடைந்து 2001ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டின் இறுதியில் 92.2 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.

தனியார்துறையின் பங்கு தொடர்ந்தும் அதிகரித்த போக்கினைக் கொண்டிருந்ததுடன் தொழில் உருவாக்கத்தின் முக்கிய மூலமாகவும் விளங்கியது. தனியார்துறை ஊழியர்களின் பங்கு 2000ஆம் ஆண்டின் 43.7 சதவீதத்திலிருந்து 2001ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 47.8 சதவீதத்திற்கு அதிகரித்ததுடன் தொழிலுள்ளோரின் விரிந்த வகைகளிடையே அதாவது அரசதுறை ஊழியர்களின் தனியார்துறை ஊழியர்கள், தொழில்தருநர்கள், சுயதொழில் புரிவோர் (சொந்தத் தொழில் புரிவோர்) மற்றும் கூலி வழங்கப்படாத குடும்ப வேலையாட்கள் ஆகியோரிடையே உயர்வானதாகவும் காணப்பட்டது.

அதேவேளை மொத்த தொழில்நிலையில் 1998 இலிருந்து தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்த வந்த அரசதுறைத் தொழில்நிலையின் பங்கு 2000ஆம் ஆண்டின் 13.5 சதவீதத்திலிருந்து 2001ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 13.0 சதவீதத்திற்கு சிறிதளவால் மேலும் வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சிக்கு 2001ஆம் ஆண்டில் அரசதுறைத்தொழில் நிலையின் அதிகரிப்பு வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியும் சான்றாக இருந்தது. இலங்கை மத்திய வங்கியினால் நடத்தப்பட்ட ஆண்டு

## அட்டவணை 7.5
## அரசதுறை தொழில் நிலை

| ஆண்டு | அரச நிறுவனங்கள்(அ) | அரசுசார் நிறுவனங்கள்(ஆ) | மொத்தம் |
|---|---|---|---|
| 1990 | 649,000 | 703,200 | 1,352,200 |
| 1994 | 699,898 | 625,266 | 1,325,164 |
| 1995 | 737,504 | 569,484 | 1,306,988 |
| 1996 | 752,194 | 409,278 | 1,161,472 |
| 1997 | 762,067 | 309,633 | 1,071,700 |
| 1998 | 790,492 | 300,654 | 1,091,146 |
| 1999 | 822,122 | 298,248 | 1,120,370 |
| 2000 | 856,665 | 299,615 | 1,156,280 |
| 2001 (இ) | 863,993 | 300,997 | 1,164,990 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) மத்திய அரசாங்கம், உள்ளூராட்சி மன்றம், மாகாண சபைகள்
(ஆ) அரச கூட்டுத்தாபனங்கள், சட்ட நியதிச் சபைகள், அதிகாரசபைகள் போன்றன.
(இ) தற்காலிகமானவை

அரசதுறைத் தொழில்நிலை அளவீடு மத்திய அரசு உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாணசபைகள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள், அதிகாரசபைகள் போன்ற அரசுசார் நிறுவனங்களையும் உள்ளடக்கியிருந்தது. அளவீட்டின்படி, அரச துறையிலுள்ள தொழில்நிலையின் அதிகரிப்பு வீதம் 2000ஆம் ஆண்டின் 3.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2001ஆம் ஆண்டுப் பகுதியில் 0.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மத்திய அரச தொழில்நிலை 2001இல் ஏறத்தாழ 864,000 பேருக்கு 1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்ததுடன், அரச துறையின் தொழில்நிலை அதிகரிப்பதற்குப் பங்களித்த முக்கிய பங்களிப்பாளராக ஏறத்தாழ 9,000 தொழில்நிலை மதிப்பிடப்பட்டது. கடந்த காலத்தினைப் போன்றே, தொழிலாளர்களின் அதிகரிப்புக்கள் பாதுகாப்பு ஆளணியினரிலும் அரச கூட்டுத்தாபனங்களினலும் அவதானிக்கப்பட்டது.

கைத்தொழில் மற்றும் பணிகளிலுள்ள தொழில்நிலையின் சதவீதப் பங்குகள் 2000ஆம் ஆண்டின் 23.6 சதவீதத்திலிருந்தும் 40.3 சதவீதத்திலிருந்தும் 2001ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் முறையே 25.1 சதவீதத்திற்கும் 42.6 சதவீதத்திற்கும் அதிகரித்ததுடன் தொடர்ந்தும் தொழில் உருவாக்கத்திற்கான முக்கிய துறைகளாகவும் காணப்பட்டன. முதலீட்டுச்சபைக் கம்பனிகளின் தொழில்நிலை 2000ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மெதுவான வேகத்தில் அதிகரித்தது. தொழில்நிலையின் அதிகரிப்பு 2000ஆம் ஆண்டின் 41,000 உடன் ஒப்பிடுகையில் 2001இல் 18,000 ஆக அமைந்து குறைந்த இயலளவுப் பயன்பாட்டையும் முதலீட்டையும் பிரதிபலித்தன.

வேளாண்மையில் தொழில்நிலை உருவாக்கம் மோசமடைந்ததுடன் தொழில்நிலையின் சதவீதப்பங்கு 2000ஆம் ஆண்டின் 36.0 சதவீதத்திலிருந்து 2001ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 32.4 சதவீதத்திற்கு

அட்டவணை 7.6
பொருளாதார நடவடிக்கைகளின்படி தொழில்நிலை

| காலம் | ஆயிரம் ஆட்களில் | | | | | மொத்த தொழில்நிலையின் சதவீதமாக | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1999 (அ) | 2000 (அ) | 2001 | | | 1999 | 2000 | 2001 | | |
| | | | 1 ஆம் காலாண்டு | 2 ஆம் காலாண்டு (ஆ) | 3 ஆம் காலாண்டு | | | 1 ஆம் காலாண்டு | 2 ஆம் காலாண்டு (ஆ) | 3 ஆம் காலாண்டு |
| **வேளாண்மை** | **2,205** | **2,274** | **1,992** | **வி.கி.** | **2,007** | **36.2** | **36.0** | **32.1** | **வி.கி.** | **32.4** |
| **கைத்தொழில்** | **1,332** | **1,491** | **1,474** | **வி.கி.** | **1,555** | **21.9** | **23.6** | **23.7** | **வி.கி.** | **25.1** |
| சுரங்கமகழ்தல் கல்லுடைத்தல் | 76 | 67 | 101 | வி.கி. | 118 | 1.2 | 1.1 | 1.6 | வி.கி. | 1.9 |
| தயாரிப்பு | 902 | 1,045 | 1,036 | வி.கி. | 1,088 | 14.8 | 16.6 | 16.7 | வி.கி. | 17.5 |
| கட்டடவாக்கம் | 322 | 348 | 337 | வி.கி. | 348 | 5.3 | 5.5 | 5.4 | வி.கி. | 5.6 |
| மின்வலு, வாயு மற்றும் நீர் (இ) | 32 | 31 | | வி.கி. | | 0.5 | 0.5 | | வி.கி. | |
| **பணிகள்** | **2,546** | **2,545** | **2,746** | **வி.கி.** | **2,641** | **41.9** | **40.3** | **44.2** | **வி.கி.** | **42.6** |
| வர்த்தகம், உணவகங்கள் முதலியன | 736 | 801 | ● 820 | வி.கி. | 738 | 12.1 | 12.7 | 13.2 | வி.கி. | 11.9 |
| போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் தொடர்பூட்டல் | 311 | 307 | 412 | வி.கி. | 406 | 5.1 | 4.9 | 6.6 | வி.கி. | 6.5 |
| நிதி காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்து | 100 | 131 | 138 | வி.கி. | 119 | 1.6 | 2.1 | 2.2 | வி.கி. | 1.9 |
| தனிப்பட்ட பணிகள் மற்றும் ஏனையவை | 1,399 | 1,307 | 1,376 | வி.கி. | 1,378 | 23.0 | 20.7 | 22.2 | வி.கி. | 22.2 |
| மொத்தத் தொழில் வாய்ப்பு | 6,083 | 6,310 | 6,212 | வி.கி. | 6,202 | 100 | 100 | 100 | வி.கி. | 100 |
| தொழிற்படையின் சதவீதம் | 91.1 | 92.4 | 92.3 | வி.கி. | 92.2 | | | | | |

(அ) நான்கு காலாண்டுகளினதும் சராசரி.
(ஆ) 2001ஆம் ஆண்டு 2ஆம் காலாண்டில் குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் காலாண்டுத் தொழிற்படை அளவீடு நடத்தப்படவில்லை.
(இ) 2001ஆம் ஆண்டு 1ஆம் காலாண்டிலிருந்து மின்வலு, வாயு மற்றும் நீர் ஆகியன தனிப்பட்ட பணிகளின்கீழும் ஏனையவை காலாண்டுத் தொழிற்படை அளவீட்டின்கீழும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

மூலம்: குடிமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்.

வீழ்ச்சியடைந்தது. வேளாண்மைத் துறையில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு 2001ஆம் ஆண்டில் நிலவிய கடுமையான வரட்சியே முக்கிய காரணமாக இருந்தது. இது வரட்சியினால் பாதிக்கப்பட்ட துறைகளின் தொழில்நிலை உருவாக்கத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியில் பிரதிபலிக்கப்பட்டது.

## 7.5 தொழில் வாய்ப்பின்மை

வீழ்ச்சியடைந்த முதலீடும் பொருளாதாரத்தில் ஏற்பட்ட சுருக்கமும் தொழிலாளர் கேள்வியின் மீது கொண்டிருந்த தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் தொழில் வாய்ப்பின்மை வீதம 2000ஆம் ஆண்டின் 7.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2001இல் மூன்றாம் காலாண்டில் 7.8 சதவீதத்திற்கு சிறிதளவால் உயர்வடைந்தது. 1971ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க வேலையாட்களின் தொழில்நிலையை முடிவுறுத்தல் சட்டம், தனியார் நிறுவனமொன்று ஒழுக்காற்று அல்லாத காரணங்களுக்காக தொழில் ஆணையாளரின் எழுத்து மூலமான முன்அனுமதியின்றி அல்லது ஊழியரின் சம்மதமின்றி 15 அல்லது அதற்கு கூடுதலான ஊழியர்களை வேலையிலிருந்தும் நீக்குவதனைத் தடைசெய்கிறது. இதன் விளைவாக பல தொழில் முயற்சிகள் கேள்வியின்மை காரணமாக அவற்றின் நடவடிக்கைகளை குறைப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்ட

அட்டவணை 7.7
தொழிலற்றோர் வீதம்
(தொழிற்படையின் சதவீதமாக)

| காலம் | தொடர்பான ஒருவார காலம் | | | | தொடர்பான 12 மாத காலம் |
|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | எல்லோரும் | சம்பளமற்ற குடும்ப வேலையாட்கள்தவிர (அ) | எல்லோரும் |
| 1992 | 10.7 | 22.9 | 14.6 | 16.1 | 16.2 |
| 1993 | 9.7 | 21.7 | 13.8 | 15.1 | 17.5 |
| 1994 | 9.7 | 20.1 | 13.1 | 14.3 | 12.9 |
| 1995 | 8.8 | 18.8 | 12.3 | 13.4 | 12.0 |
| 1996 | 8.5 | 18.0 | 11.3 | 12.4 | 11.8 |
| 1997 | 7.7 | 16.1 | 10.5 | 11.5 | 11.6 |
| 1998 | 6.5 | 14.0 | 9.2 | 10.5 | 10.4 |
| 1999 | 6.7 | 13.0 | 8.9 | 10.0 | 9.1 |
| 2000 | 5.8 | 11.1 | 7.6 | 8.6 | 8.2 |
| 1ஆம்காலாண்டு | 6.4 | 11.1 | 8.0 | 9.1 | 8.8 |
| 2ஆம்காலாண்டு | 5.3 | 10.1 | 7.0 | 8.1 | 7.8 |
| 3ஆம்காலாண்டு | 6.0 | 11.8 | 8.0 | 8.9 | 8.6 |
| 4ஆம்காலாண்டு | 5.4 | 11.3 | 7.4 | 8.3 | 7.9 |
| 2001 | | | | | |
| 1ஆம்காலாண்டு | 5.8 | 11.7 | 7.7 | 8.5 | 7.7 |
| 2ஆம்காலாண்டு(ஆ) | வி.கி. | வி.கி. | வி.கி. | வி.கி. | வி.கி. |
| 3ஆம்காலாண்டு | 6.0 | 11.5 | 7.8 | 8.6 | 8.5 |

மூலங்கள்: தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம். இலங்கை மத்திய வங்கி.

(அ) தொழிலிலுள்ள தொழிற்படையிலிருந்து சம்பளமற்ற குடும்ப வேலையாட்களை நீக்குவதன் மூலம் மதிப்பிடப்பட்ட தொழிலின்மை வீதம்.
(ஆ) 2001ஆம் ஆண்டு 2ஆம் காலாண்டுக்கான தொழிற்படை அளவீடு தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடாத்தப்படவில்லை.

### அட்டவணை 7.8
### வயது அடிப்படையில் தொழிலற்றோர் வீதம் (தொழிற்படையின் வீதம்)

| காலம் | வயதுத் தொகுதியினர் (ஆண்டுகள்) | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 15-19 | 20-29 | 30-39 | 40-49 | 50உம் அதற்கு மேலும் | எல்லாம் |
| 1992 | 39.1 | 27.5 | 7.8 | 3.5 | 1.4 | 14.6 |
| 1993 | 38.4 | 25.2 | 8.4 | 3.3 | 1.5 | 13.8 |
| 1994 | 40.7 | 24.5 | 7.6 | 2.5 | 1.2 | 13.1 |
| 1995 | 37.6 | 22.2 | 8.0 | 2.9 | 0.4 | 12.3 |
| 1996 | 36.5 | 22.0 | 6.0 | 1.9 | 0.5 | 11.3 |
| 1997 | 34.0 | 21.9 | 5.2 | 1.7 | 0.6 | 10.5 |
| 1998 | 27.3 | 19.3 | 4.9 | 2.0 | 0.7 | 9.2 |
| 1999 | 28.4 | 18.9 | 4.4 | 1.6 | 1.0 | 8.9 |
| 2000 | 23.3 | 17.4 | 3.6 | 1.3 | 0.8 | 7.6 |
| 1ஆம் காலாண்டு | 22.1 | 19.0 | 3.8 | 1.1 | 0.7 | 8.0 |
| 2ஆம் காலாண்டு | 22.5 | 15.0 | 3.6 | 1.6 | 0.9 | 7.0 |
| 3ஆம் காலாண்டு | 21.3 | 19.7 | 3.3 | 1.2 | 1.0 | 8.0 |
| 4ஆம் காலாண்டு | 27.4 | 15.8 | 3.7 | 1.3 | 0.7 | 7.4 |
| 2001 (அ) | | | | | | |
| 1ஆம் காலாண்டு | 28.5 | 18.1 | 2.9 | 0.7 | | 7.7 |
| 2ஆம் காலாண்டு(ஆ) | வி.கி. | வி.கி | வி.கி. | வி.கி | | வி.கி. |
| 3ஆம் காலாண்டு | 32.7 | 18.0 | 3.0 | 1.0 | | 7.8 |

மூலம்: தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்.

(அ) முதல் நான்கு காலாண்டுகளுக்குமான சராசரி.
(ஆ) 2001ஆம் ஆண்டு 2ஆம் காலாண்டுக்கான தொழிற்படை அளவீடு குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடாத்தப்படவில்லை.

போதும், செலவினைக் குறைத்து வியாபாரங்கள் மூடப்படுவதனைத் தவிர்க்கும் பொருட்டு ஊழியர்களுக்கு படிகள் எதுவுமில்லாமல் அவர்களின் ஆகக்குறைந்த சம்பளத்தினைச் செலுத்தி அவர்களை வீடுகளிலேயே இருக்குமாறு கேட்டுக்கொண்டன. சுற்றுலா விடுதித் துறையில் பயங்கரவாதிகளின் தாக்குதலின் பின்னர் வேலையிலிருந்து நீக்கப்படும் தொழிலாளர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 40,000இற்கு உயரும் என எதிர்பார்க்கப்பட்டபோதும் வேலையாட்களின் தொழில் நிலை முடிவுறுத்தல் சட்டம் அத்தகைய வேலை நீக்கத்தினைத் தடுத்துவிட்டது. இதன்படி கட்டாயமாகப் பேணப்பட்ட தொழில் நிலைமட்டங்கள் பாதிக்கப்பட்டட துறைகளின் தொழில்நிலைக் குறைப்புக்கள் மீதான பொருளாதாரப் பின்னடைவுகளின் தெளிவான பிரதிபலிப்பினைத் தடுத்துவிட்டன.

வயது அடிப்படையிலான பகுப்பாய்வுகளின் படி தொழில்வாய்ப்பின்மை வீதங்கள் இளவயது தொகுதியினரிடையே மிக உயர்வாகக் காணப்பட்டதுடன் வயது அடிப்படையில் உறுதியாக வீழ்ச்சியடைந்தது. குறிப்பாக 15-19 மற்றும் 20-29 வயதுத் தொகுதியினரிடையே தொடர்ந்து காணப்படும் தொழில்வாய்ப்பின்மை வீதங்கள் 2000ஆம் ஆண்டிலிருந்து மோசமடைந்து இருப்பதனாலும் அவை பொருளாதாரத்தில் காணப்படும் பொதுவான வீதங்களை விட குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வாக இருந்தமையினாலும் இவ்விரு தொகுதியிலும் காணப்படும் தொழிலின்மை வீதங்கள் மிகுந்த கரிசனைக்குரியவைகளாகும்.

க.பொ.த சாதாரணம் மற்றும் அதற்கு மேற்பட்ட உயர்ந்த தகைமைகளைக் கொண்ட படித்த இளைஞரிடையேயான தொழிலின்மை வீதம், குறைந்த கல்வியைக் கொண்ட தொகுதியினரிடையேயான தொழிலின்மை வீதத்துடன் ஒப்பிடுகையில் தொடர்ந்தும் உயர்வாகக் காணப்பட்டன. பட்டதாரிகள் மற்றும் பட்டதாரிகளல்லாத இரு படித்த இளைஞரிடையேயுமான தொழிலின்மைப் பிரச்சனைகள் தேர்ச்சிப் பொருத்தமின்மை காரணமான மிக நெருக்கடியைக் கொண்டனவாக விளங்குகின்றன. பொருத்தமான தேர்ச்சியின்மை தனியார்துறையில் அல்லது வெளிநாடுகளில் தொழில் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பினைக் கட்டுப்படுத்துகின்றது. தனியார் துறையின் மனித மூலவளத் தேவைப்பாடுகளுக்கும், அரச பல்கலைக்கழகங்களினால் உருவாக்கப்பட்ட பட்டதாரிகளின் தகைமைகளுக்குமிடையேயான பொருத்தப்பாடின்மை பல்கலைக்கழக கல்வி முறையில் சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டியதன் அவசியத்தை எடுத்துக்காட்டுகின்றன. இப் பொருத்தப்பாடின்மையைக் கட்டுப்படுத்தும் விதத்தில் இலங்கை வர்த்தக

### அட்டவணை 7.9
### கல்வி அடிப்படையில் தொழிலற்றோர் வீதம் (தொழிற்படையின் சதவீதம்)

| காலம் | பாடசாலை செல்லாதோர் | வகுப்பு 0-4 ஆண்டு 1-5 | வகுப்பு 5-9 ஆண்டு 6-10 | க.பொ.த.(சா.த.) பொ.க.தே.சா. | க.பொ.த.(உ.த.) தே.க.பொ.த.ப மற்றும் அதற்கு மேலும் | எல்லாம் |
|---|---|---|---|---|---|---|
| 1992 | 3.0 | 4.7 | 15.9 | 22.2 | 22.4 | 14.6 |
| 1993 | 3.1 | 4.9 | 13.7 | 21.3 | 23.3 | 13.8 |
| 1994 | 2.6 | 5.0 | 13.0 | 19.6 | 23.7 | 13.1 |
| 1995 | 1.8 | 3.4 | 12.8 | 18.4 | 20.0 | 12.3 |
| 1996 | 2.8 | 3.4 | 12.2 | 16.4 | 19.0 | 11.3 |
| 1997 | 2.0 | 2.4 | 10.6 | 15.9 | 19.3 | 10.5 |
| 1998 | 1.0 | 2.4 | 9.0 | 13.7 | 17.5 | 9.2 |
| 1999 | 0.4 | 1.9 | 8.2 | 13.6 | 17.9 | 8.9 |
| | 1.2 | 1.0 | 7.5 | 11.3 | 14.9 | 7.6 |
| 2000 | 1.3 | 1.1 | 7.9 | 11.2 | 15.4 | 8.0 |
| 1ஆம் காலாண்டு | 1.8 | 1.1 | 6.8 | 11.4 | 13.1 | 7.0 |
| 2ஆம் காலாண்டு | 1.2 | 1.0 | 7.6 | 12.0 | 15.2 | 7.9 |
| 3ஆம் காலாண்டு | 0.5 | 0.6 | 7.5 | 10.6 | 15.8 | 7.4 |
| 4ஆம் காலாண்டு | | | | | | |
| 2001 | | | | | | |
| 1ஆம் காலாண்டு | 1.3 | | 6.9 | 11.1 | 15.3 | 7.7 |
| 2ஆம் காலாண்டு(ஆ) | வி.கி. | | வி.கி. | வி.கி. | வி.கி. | வி.கி. |
| 3ஆம் காலாண்டு | 1.6 | | 6.9 | 11.3 | 15.9 | 7.8 |

மூலம்: தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்.

(அ) முதல் நான்கு காலாண்டுச் சராசரி.
(ஆ) 2001ஆம் ஆண்டு 2ஆம் காலாண்டுக்கான தொழிற்படை அளவீடு குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடாத்தப்படவில்லை.

சம்மேளனத்தின் உதவியுடன் பல்கலைக்கழகங்களில் பதவி வழிகாட்டல் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், நான்கு முக்கிய வர்த்தக சம்மேளனங்களுக்கும் அரசிற்குமிடையிலான இணைந்த தொழில்முயற்சியான தறுண அறுண நிறுவனம் தனியார்துறையில் பட்டதாரிகளின் உதவியைப் பெற்றுக்கொண்டது. இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தெரிந்தெடுக்கப்பட்ட பட்டதாரிகளுக்கு கிடைக்கத்தக்க நிரந்தரப் பதவியில் அவர்கள் ஈர்த்துக்கொள்ளப்படுவர் என்ற விருப்புடன் 16 மாதப் பயிற்சி வழங்கப்பட்டது.

## 7.6 வெளிநாட்டு தொழில்வாய்ப்பு

2001இல் பல பின்னடைவுகள் காணப்பட்டபோதும் வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புத் துறையில் உறுதியான முன்னேற்றம் அடையப்பட்டது. 2001 யூலையின் கட்டுநாயக்கா வானூர்தி நிலையத்தின் மீதான பயங்கரவாதிகளின் தாக்குதல் காரணமாக பறப்புக்கள் குறைக்கப்பட்டு புறப்படல்களில் காணப்பட்ட தாமதங்களும் ஐக்கிய அமெரிக்காவில் இடம்பெற்ற பயங்கரவாதிகளின் தாக்குதலைத் தொடர்ந்து இன்னொரு வளைகுடாப்போர் பற்றிய தற்காலிக பயமும் அதனைத் தொடர்ந்த சம்பவங்களும் 2001இன் முக்கிய பின்னடைவுகளாகக் காணப்பட்டன. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் படி, வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காகச் சென்றவர்களின் பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை 2000ஆம் ஆண்டின் 181,000 உடன் ஒப்பிடுகையில் 2001இல் ஏறத்தாழ 184,000 இற்கு அதிகரித்ததுடன், 2001இற்காக எறிவு செய்யப்பட்ட இலக்கான 183,750 இனை விஞ்சிக் காணப்பட்டமைக்கு சரியான நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட தலையீடுகளும், வெளிநாட்டு எறிவுகளின் மோசமான தாக்கத்தினைக் குறைப்பதற்கு அனைத்துப் பங்குடமையாளர்களினாலும் எடுக்கப்பட்ட முயற்சிகளுமே காரணங்களாகும்.

2001இல் உரிமம் பெற்ற வேலைவாய்ப்பு முகவர்களின் மொத்த எண்ணிக்கை 528 இற்கு 83இனால் அதிகரித்தது. இதேபோன்று, உரிமம் பெற்ற முகவரினூடாகப் பெறப்பட்ட வேலைவாய்ப்புக்களின் பங்கு 2000ஆம் ஆண்டின் 70 சதவீதத்திலிருந்து 2001இல் 72 சதவீதத்திற்கு அதிகரித்தது. இம் முன்னேற்றம் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் உரிமம் பெற்ற முகவர்கள் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்பட்டு வருவதன் விளைவாக புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் உரிமம் பெற்ற முகவர்களின் மீது வைத்த நம்பிக்கை அதிகரித்தமையின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கிறது. கொழும்பிற்கு வெளியேயுள்ள உரிமம் பெற்ற முகவர்களின் பங்கு 2000ஆம் ஆண்டில் 35 சதவீதத்திலிருந்து 2001ஆம் ஆண்டு இறுதியில் 38 சதவீதத்திற்கு உயர்வடைந்து வாய்ப்பு மிக்க தொழில் தேடுநர்கள் உரிமம் பெற்ற முகவர்களை அசைக்கக்கூடிய தன்மை மேம்படுவதற்கு நேரடியாகப் பங்களித்தது.

அட்டவணை 7.10
வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பு

எண்ணிக்கை (சதவீதம் அடைப்புக்குறிக்குள்)

| விடயம் | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 (அ) |
|---|---|---|---|---|---|
| தொழிலில் உள்ளோர் | 150,283 | 159,816 | 179,114 | 181,370 | 183,856 |
| மூலத்தின்படி | | | | | |
| உரிமம் பெற்ற முகவர்கள் | 115,043 (77) | 112,539 (70) | 120,220 (67) | 126,973 (70) | 132,319 (72) |
| ஏனையோர் | 35,240 (23) | 47,277 (30) | 58,894 (33) | 54,397 (30) | 51,537 (28) |
| பால்வகையின்படி | | | | | |
| ஆண்கள் | 37,552 (25) | 53,867 (34) | 63,504 (35) | 59,725 (33) | 59,661 (32) |
| பெண்கள் | 112,731 (75) | 105,949 (66) | 115,610 (65) | 121,645 (67) | 124,195 (68) |
| மனிதவலு வகை | | | | | |
| வீட்டுப் பணிப்பெண்கள் | 99,429 (66) | 85,349 (53) | 87,710 (49) | 98,636 (54) | 102,791 (56) |
| தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் | 24,578 (16) | 31,787 (20) | 37,187 (21) | 36,370 (20) | 36,758 (20) |
| தேர்ச்சியற்ற தொழிலாளர்கள் | 20,485 (14) | 34,109 (21) | 43,649 (24) | 35,905 (20) | 33,026 (18) |
| ஏனையோர் | 5,791 (4) | 8,571 (5) | 10,568 (6) | 10,459 (6) | 11,281 (6) |
| உரிமம் பெற்ற தொழில் முகவர்கள் (ஆண்டு முடிவில்) | 520 | 385 | 500 | 445 | 528 |
| பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை | | | | | |
| இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் | 15 | 17 | 20 | 21 | 20 |
| தனியார் முகவர்களினால் | 22 | 28 | 29 | 8 | 9 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு வகைகள் பங்கீட்டில் எந்த விதமான குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களையும் எடுத்துக்காட்டவில்லை. வீட்டுப் பணிப்பெண்கள் தொடர்ந்தும் முக்கிய பங்கிற்கு (56 சதவீதம்) வகைகூறிய வேளையில் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் ஏறத்தாழ மற்றொரு 20 சதவீதத்திற்கு வகைகூறினர். பெண் தொழிலாளர்களின் சதவீதப் பங்கு 2000ஆம் ஆண்டின் 67 சதவீதத்திலிருந்து 2001ஆம் ஆண்டில் 68 சதவீதத்திற்கு சிறிதளவால் உயர்வடைந்தது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் நன்மையளிக்கும் பல திட்டங்களை தொடர்ந்தும் மேற்கொண்டது. புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு 1750 புலமைப் பரிசில்களும் பள்ளிக்கூட உபகரணங்களும் விநியோகிக்கப்பட்டமையும் மக்கள் வங்கிக்கூடாக வீடமைப்பு மற்றும் சுயவேலை வாய்ப்புக்களுக்கான கடன்களை வழங்க செய்யப்பட்ட ஒழுங்குகளும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்ட வசதிகளில் சிலவாகும். மேலும் "விதேசிகா" கடன் திட்டத்தின் கீழ் மக்கள் வங்கியிடமிருந்து புலம் பெயர்ந்த தொழிலாளர்களினால் பெறப்பட்ட கடனுக்கான வட்டியின் மீது வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் உதவுதொகைக் கொடுப்பனவாக மக்கள் வங்கிக்கு ரூ.3.9 மில்லியனைச் செலுத்தியது.

அபிவிருத்தியடைந்த நாடுகளில் மிகுந்த வருமானம் தரும் வெளிநாட்டுச் தொழில் வாய்ப்புச் சந்தைகளை இலங்கை பெற்றுக்கொள்ளக்கூடிய நேரம் இதுவேயாகும். இச் சந்தைகளின் கேள்வி களனி நிகழ்ச்சிப்படுத்துநர்கள், தாதிகள் போன்ற தொழில்நுட்ப தேர்ச்சி பெற்ற வேலையாட்களுக்கு தொடர்ச்சியாகக் காணப்படும். இந் நாடுகளில் வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்களை எம் நாட்டினால் பெறமுடியாமல் இருப்பதற்கு ஆங்கிலம் போன்ற பன்னாட்டு மொழியிலும் ஏற்றுக்கொள்ளத்தக்க தொழில்நுட்பத் தகைமைகள் போன்றவற்றிலும் போதுமான தகைமை இல்லாமையே காரணமாகும். மேலும், உலகம், உலகமயமாக்கப்பட்டு வருவதானலும் அது நாடுகளின் தேசிய எல்லைகளை அகற்றி தொழிலாளர் கட்டுப்பாடின்றி சுதந்திரமாக இயங்குவதனை வலியுறுத்துவதனாலும், இச்சந்தைகள், இளைஞரிடைய காணப்படும் உயர்ந்த தொழில் வாய்ப்பின்மைக்கான பொருத்தமான பாதுகாப்பான ஒரு வடிகாலாக அமையும். எனவே, எதிர்காலத்தில் வெளிநாட்டு தொழில் வாய்ப்பிற்காக இப் புதிய சந்தைகளை இலக்காகக் கொண்டு அரசாங்கம் முன்மொழிந்த இளைஞர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் படித்த இளைஞர்களுக்கு பயிற்சி போன்ற திறமைகளை வழங்குவது பற்றி பரிசீலிப்பது முக்கியமானதாகவுள்ளது.